TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093887

1. District : திருச்சி
மாவட்டம்
PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
காவல்நிலையம்
Year: 2019
ஆண்டு
FIR No.: 10
மு.த.அ. எண்
Date: 19.10.2019
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 (As amended in 2018) Sections பிரிவுகள்: 7 & 7(A)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 18.10.2019 நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 19.10.2019 Time : 10.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம் (கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் வடக்கு 14 Km
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : சார் பதிவாளர் அலுவலகம், ஸ்ரீரங்கம், திருச்சி
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : பெ. பாலு
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : பெரியண்ணன்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 01.02.1962
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர்
தொழில்
(g) Address : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

காலம் 12ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதம் இல்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

காலம் 7–இல் கண்ட எதிரிகளின் பெயர்கள்

1) திரு.மு.ராஜேந்திரன், வயது.43/2019, த/பெ.முத்துசாமி, சார்பதிவாளர், ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகம், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். வீட்டு முகவரி: எண்.7A/Z61, புதிய மதனகோபாலபுரம், பெரம்பலூர் மாவட்டம்.

(2) திரு.சுந்தர்ராஜ், வயது.33/2019, த/பெ.பிச்சை பிள்ளை, எண்.44/32, அம்பேத்கார் தெரு, எலம்பலூர், பெரம்பலூர் மாவட்டம்.

நான் (ப.அருள்ஜோதி, காவல் ஆய்வாளர்) இன்று (19.10.2019) காலை 10.30 மணியளவில் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருச்சி மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர் திரு.பெ.பாலு அவர்கள் என் முன்பாக ஆஜராகி, திருச்சி, ஸ்ரீரங்கம் சார் பதிவாளர் அலுவலகத்தை 18.10.2019 அன்று மாலை 18.00 மணிக்கு நடத்தப்பட்ட திடீர்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ப.அருள்ஜோதி பதவி காவல் ஆய்வாளர் பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ஊ.த.க.பிரிவு, திருச்சி காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 19.10.19

[signature] 19.10.2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge / Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19.10.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 1200 hrs

Name: பெயர் P. அருள் ஜோதி
Rank: நிலை காவல் ஆய்வாளர்
ஊ.த.க.பிரிவு
திருச்சி

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.10/2019 இன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்கவேண்டி, மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளை இணைத்து, 19.10.2019 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் மூலமாக கொடுத்தார். மேற்படி வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறைகள் பின்வருமாறு அனுப்புநர் பெ.பாலு, மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அம்மா, பொருள்: திருச்சி, ஸ்ரீரங்கம் சார்பதிவாளரர் அலுவலகம் – திடீர் சோதனை மேற்கொண்டது – மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி. திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி இரகசிய தகவலின் அடிப்படையில், திருச்சி ஊ.த.க பிரிவில் இருந்து தெரிவித்த தகவலின் பேரில் 18.10.2019ம் தேதி, மாலை சுமார் 04.30 மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு வந்து காவல் ஆய்வாளர் திருமதி.அருள்ஜோதி, மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் தகவலின் பேரில் வந்த அலுவல் சாட்சி திரு.ஸ்டீபன்தன்ராஜ், கிராம நிர்வாக அலுவலர், தாமலவாரூபயம் கிராமம், (உறையூர்), திருச்சி மேற்கு, திருச்சி ஆகியோருடன் புறப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மாலை 06.00 மணி முதல் இரவு 09.00 மணிவரை திடீர் சோதனை மேற்கொண்டு, சோதனையின்போது திரு.ராஜேந்திரன், சார்பதிவாளர் ஸ்ரீரங்கம் சார்பதிவகம் என்பவரிடமிருந்து ரூ.1,23,000/–மும், திரு.சுந்தர்ராஜ் த/பெ பிச்சை பிள்ளை, தனி நபரிடமிருந்து ரூ.8,500/– கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் 18.10.2019ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள, (கையொப்பம்) பெ.பாலு. Sir, Reced the complaint and registered a case in Trichy V&AC Cr.No. 10/2019 U/s 7 & 7(A) of the Prevention of Corruption Act 1988 ( As amended in 2018) on 19.10.2019 at 10.30 hrs (signed) Inspr of Police V&AC, Trichy. திடீர் சோதனை செயல்முறை இன்று 18.10.2019 மாலை 18.00 மணிக்கு திருச்சி மாநகரம், ஸ்ரீரங்கம் பகுதியில், அரசு பொது மருத்துவமனை எதிரில் அமைந்துள்ள ஸ்ரீரங்கம்

சார்பதிவகத்தை திரு.பெ.பாலு, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி, திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.அருள்ஜோதி மற்றும் அவரது குழுவினர் உதவியுடன் வேண்டுகோளின்பேரில் வந்திருந்த அலுவல் சாட்சி திரு.ஸ்டீபன்தன்ராஜ், த/பெ.வேளாங்கண்ணி, கிராம நிர்வாக அலுவலர், தாமலவாருபயம் கிராமம் (உறையூர்), திருச்சி மேற்கு முன்னிலையில் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர். திருச்சி மாநகரம், ஸ்ரீரங்கம் பகுதியில், அரசு பொது மருத்துவமனை எதிரில் அமைந்துள்ள ஸ்ரீரங்கம் சார்பதிவகத்தில், பதிவு உள்ளிட்ட ஏனைய அரசு அலுவல்களை செய்து கொடுக்க கூஷ சார்பதிவக பணியாளர்கள், நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டுப்பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில், இன்று 18.10.2019 மாலை சுமார் 17.30 மணிக்கு கூஷ அலுவலர்கள் கூஷ சார்பதிவக அலுவலகத்தை முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்வதற்கு கூஷ சார்பதிவக அலுவலக முன்பக்க பிரதான கதவு வழியே உள்ளே நுழைந்ததும் கூஷ சார்பதிவகத்தை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. அலுவலக வராண்டாவில் சந்தேகப்படும்படியான 1 நபர் நின்று கொண்டும், அலுவலகத்தின் உள்ளே பொது மக்கள் காத்திருக்கும் அறையில் 3 நபர்கள் அமர்ந்திருந்தார்கள். அலுவலகத்தின் அனைத்து அறைகளுக்கும் காவலர்களை அனுப்பி பாதுகாப்புக்காக நிற்க செய்யப்பட்டது. சார்பதிவாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் வந்திருக்கும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினரையும், திடீர் சோதனை செய்ய வந்த விபரத்தையும் கூறி சோதனை தொடங்கப்பட்டது. சார்பதிவாளர் பெயரை கேட்க அவர் தன் பெயர் திரு.ராஜேந்திரன், சார்பதிவாளர் என்றும் தெரிவித்தார். சார்பதிவகத்தின் உள்ளே நுழைந்ததும் வராண்டாவில் நின்றிருந்த தனி நபரை பற்றி விசாரிக்க தன் பெயர் திரு.சுந்தர்ராஜ், வயது.33/2019, த/பெ.பிச்சை பிள்ளை, எண்.44/32, அம்பேத்கார்தெரு, எலம்பலூர், பெரம்பலூர் மாவட்டம் என்றும், தான் சார்பதிவளருக்கு தனி உதவியாளராக இருந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ய அவரின் வலது பேண்ட் பாக்கெட்டில் 2000, 500

ரூபாய் நோட்டுக்களாக பணம் வைத்திருந்தார். அப்பணத்தை மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர் மூலம் எண்ணிப்பார்க்க ரூ.8500/– பணம் இருந்தது. அந்தப்பணம் பற்றிய விபரம் தனிநபர் திரு.சுந்தர்ராஜிடம் கேட்க எதுவும் தெரிவிக்காமல் அமைதியாக இருந்தார். மேற்படி பணம் ரூ.8500/– பத்திரம் பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்து சார்பதிவாளருக்காக கையூட்டாக பெற்று வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.8500/– காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.சுந்தர்ராஜ் தெரிவித்த விபரங்களை காவல் ஆய்வாளர் தனி வாக்குமூலமாக பதிவு செய்தார். மேலும், திரு.சுந்தர்ராஜிடம் வேறு பணம் எதுவும் உள்ளதா என கேட்க, தன்னுடைய சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து ரூ.400/– எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி கேட்க, அப்பணம் தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் ரூ.400/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பார்வையாளர் அமரும் ஹாலில் அமர்ந்திருந்த 3 தனி நபர்களிடம் விசாரிக்க, திருச்சி, திருவானைக்கோவிலை சேர்ந்த சண்முகம் மகன் ரவி என்றும், திருச்சி, திருவானைக்கோவிலைச் சேர்ந்த வெங்கடேஷ்வரன் மகன் தேவராஜன் என்றும் மற்றும் திருச்சி, துறையூரைச் சேர்ந்த செல்வம் மகன் சுரேஷ்குமார் என்றும் தெரிவித்தார்கள். தாங்கள் பத்திர சம்பந்தமாக விபரம் கேட்க வந்திருப்பதாக தெரிவித்தார்கள். அவர்களை சோதனை செய்ய, (1)திரு.ரவியிடம் ரூ.1370/–ம், (2)திரு.தேவராஜிடம் ரூ.590/–ம் மற்றும் (3) திரு.சுரேஷ்குமாரிடம் ரூ.6,000/–ம் இருந்தது. மேற்படி பணம் பற்றி கேட்க, அந்த பணம் தங்களுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், மேற்படி பணம் அவர்களிடமே திரும்ப வழங்கப்பட்டது. மேற்படி பொதுமக்கள் காத்திருக்கும் அறையிலிருந்து உள்ளே நுழைந்ததும் பெரிய ஹாலும், அந்த ஹாலின் தெற்கு ஓரமாக கண்ணாடியினாலான குளிரூட்டப்பட்ட கணிப்பொறி அறை இருந்தது, அதில் 2 பெண்களும் 1 ஆணும் இருந்தார்கள். அவர்கள் பெயர் பற்றி கேட்க (1)திருமதி.பானுமதி, உதவியாளர் என்றும் மற்றும் (2) செல்வி.ரம்யா, இளநிலை உதவியாளர் என்றும், மேலும் (3) திரு.விஜய், சிசிடிவி கேமரா ஆப்ரேட்டர் என்று தெரிவித்தார்கள். மேற்படி ஹாலின் மேற்கு சுவர் ஓரம் கிழக்கு பார்த்து வரிசையாக அமர்திருந்தவர்களை விசாரிக்க, அ2 இருக்கையில் திரு.டேவிட் மைக்கேல் குமார், உதவியாளரும், அதனை அடுத்து Scanning செய்யும் இயந்திரத்துடன் கூடிய ஒரு மேஜை காலியாக இருந்தது, அதனை அடுத்து அலுவலக உதவியாளர்

இருக்கையில் திரு.பெரியசாமி, அலுவலக உதவியாளரும், அதனை அடுத்து பத்திரம் பதிவு செய்யும் நபர்களை கணிணியில் போட்டோ எடுக்கும் இருக்கையில் திரு.சரவணன், புகைப்படம் எடுக்கும் தற்காலிக பணியாளரும் அமர்ந்திருந்தார்கள். அதனை ஒட்டினார்போல் அந்த ஹாலின் வடமேற்கு மூலையில் சார்பதிவாளர் இருக்கையில் திரு.ராஜேந்திரன், சார்பதிவாளர் அமர்ந்திருந்தார். அதனை அடுத்து வடக்கு பக்கம் பதிவு அறையும், அதனை ஒட்டினார்போல் மேற்கு பார்த்து வாசல் கொண்ட அலுவலர்கள் உணவு உண்ணும் அறையும், அதன் எதிர்புறம் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறையும் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தில் அனைத்து அறைகளையும் சோதனை செய்யப்பட்டபோது, அலுவலர்கள் உணவு உண்ணும் அறையை சோதனை செய்ய, மேற்படி அறையில் zycoon என்று எழுதப்பட்ட கருப்பு கலர் டிசைன்போட்ட உணவு பையை சோதனை செய்த போது அதில், 2000, 500, 100 ஆகிய ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது. அவற்றை ஆய்வு குழு ஆய்வாளர் மூலம் எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.1,23,000/– இருந்தது. மேற்படி உணவு பை பற்றி சார்பதிவாளரிடம் கேட்க, மேற்படி உணவு பை தன்னுடையது என்றும், உணவு பையில் உள்ள பணம் ரூ.1,23,000/– பற்றி கேட்க, மேற்படி பணம் பற்றிய விபரம் எதுவும் தெரிவிக்காமல் அமைதியாக இருந்தார். பின்னர் மேற்படி பணம் எவ்வாறு என் உணவு பைக்கு வந்தது என்று எனக்கு தெரியாது என முன்னுக்கு பின் முரணாக தெரிவித்தார். மேற்படி சார்பதிவாளர் திரு.ராஜேந்திரன் தெரிவித்த விபரங்களை காவல் ஆய்வாளர் தனி வாக்குமூலமாக பதிவு செய்தார். மேலும், அப்பணம் ரூ.1,23,000/– பற்றி கேட்க, யாரும் உரிமை கோராததாலும், மேற்படி பணம் பற்றிய எவ்வித விளக்கமும் தெரிவிக்காததாலும், மேற்படி பணம் ரூ.1,23,000/– பத்திர பதிவு செய்யவரும் நபர்களிடமிருந்து கையூட்டாக கேட்டுப்பெற்று வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.1,23,000/– மற்றும் zycoon என்று எழுதப்பட்ட கருப்பு கலர் டிசைன்போட்ட உணவு பை ஆகியவை காவல் ஆய்வாளர் திருமதி.அருள்ஜோதி அவர்களால் இந்த திடீர் சோதனையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. கணிப்பொறி அறையில் இன்று பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை சரிபார்த்ததில் 'அ' கணக்கில் 16 பதிவுகள் செய்யப்பட்டு, அதற்கான தொகை ஆன்லைன் epayment மூலமாக கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. B மற்றும் C கணக்கில் இன்றைய தினம் பதிவுகள் எதுவும் இல்லை. D கணக்கில் வில்லங்சான்று கேட்டு 11

விண்ணப்பங்களும், நகல் கேட்டு 2 விண்ணப்பங்களும் ஆன்லைன் மூலம் epayment மூலமாக கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. சார்பதிவாளர் திரு.ராஜேந்திரனிடம் வேறு பணம் எதுவும் உள்ளதா என்று கேட்க, அவர் தன்னுடைய சட்டை பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.680/– எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி கேட்க, அவர், தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்தால், மேற்படி பணம் ரூ.680/– சார்பதிவாளர் திரு.ராஜேந்திரனிடம் கொடுக்கப்பட்டது. கொடி நாள் வசூல் தொடர்பாக சார்பதிவாளர் திரு.ராஜேந்திரன் கேட்க கொடி நாள் வசூல் 13.09.2019 தேதியுடன் முடிக்கப்பட்டது என்றும், இன்று 18.10.2019 கொடிநாள் வசூல் செய்யவில்லை என்றும் தெரிவித்தார். மேலும், அலுவலகத்தில் உள்ள மற்ற அனைத்து நிரந்தா மற்றும் தற்காலிக பணியாளர்களில், பெண் பணியாளரை பெண் காவலர் மூலமும் மற்றவர்களை ஆண்காவலர்கள் மூலமும் சோதனை செய்து பார்க்க அவர்கள் சொந்த செலவிற்காக வைத்திருந்த சொற்ப தொகைகளை தவிர வேறு பணம் எதுவும் இல்லை. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட 18.10.2019 ம் தேதிக்கான A கணக்கு விபரம், B, C கணக்கு விபரம் மற்றும் D கணக்கு விபரம் ஆகியவைகளை உண்மை நகலிட்டு பெறப்பட்டது. மேலும், ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலக 2019 ஆம் ஆண்டு வருகைப் பதிவேட்டை கேட்க கூஷ சார்பதிவாளர் திரு.ராஜேந்திரன் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2019 ஜனவரி மாதம் 1ம் தேதி முதல் 18.10.2019 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. ஸ்ரீரங்கம் சார்பதிவக அலுவலர்களின் தனிநபர் இருப்பு பதிவேட்டை கேட்க கூஷ சார்பதிவாளர் திரு.ராஜேந்திரன் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2019 ஜனவரி மாதம் 1ம் தேதி முதல் 18.10.2019 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. மேலும், ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்த தகவல் தொகுப்பூதிய பணியாளரின் 2019 ஆம் ஆண்டு வருகைப்பதிவேட்டை கேட்க கூஷ சார்பதிவாளர் திரு.ராஜேந்திரன் ஆஜர் செய்தார். மேலும் 16.10.2018 முதல் 18.10.2019 வரை பதிவுகள் உள்ள பார்வையாளர் பதிவேடு சார்பதிவாளர் திரு.ராஜேந்திரன் ஆஜர் செய்தார். அப்பதிவேடுகளை இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக ஆய்வாளர் திருமதி.அருள்ஜோதி அவர்களால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. (திடீர் சோதனை செயல்முறைகளில் 4 பக்கங்களின் அடியில் மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர் திரு.பாலு, மாவட்ட

ஆய்வுகுழு ஆய்வாளர் திரு.ஸ்டீபன்ராஜ், கிராம நிர்வாக அலுவலர், தாமலவாருபயம் கிராமம் (உறையூர்), திருச்சி மேற்கு, திருச்சி, திருமதி.அருள்ஜோதி, காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். 4–வது பக்கத்தில் மட்டும் மேற்படி மூன்று அலுவலர்களும், ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் திரு.ராஜேந்திரன், திரு.சுந்தர்ராஜ் (தனிநபர்), உதவியாளர், திருமதி.பானுமதி உதவியாளர் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். மேற்படி திடீர் சோதனை செயல்முறையில் கண்டுள்ள நபர்களான எதிரி (1) திரு.ராஜேந்திரன், சார்பதிவாளர் ஸ்ரீரங்கம், (2) திரு.சுந்தர்ராஜ் (தனிநபர்), த/பெ.பிச்சை பிள்ளை, எண்.44/32, அம்பேத்கார் தெரு, எலம்பலூர், பெரம்பலூர் மாவட்டம், ஆகியோர்கள் மீது திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.10/2019, ச/பி 7 & 7(A) of the Prevention of Corruption Act 1988 (As amended in 2018)–ன் படி இன்று 19.10.2019 தேதி காலை 10.30 மணிக்கு குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், திருச்சி மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர் திரு.பெ.பாலு அவர்கள் கொடுத்த 19.10.2019 தேதியிட்ட கடிதம் மற்றும் 18.10.2019 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இந்த முதல் தகவல் அறிக்கையின் நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை இவ்வழக்கின் மேல் விசாரணைக்காக திரு.ம.நவநீதகிருஷ்ணன், காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, திருச்சி அவர்களிடம் ஒப்படைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

19/X/2019

(P. Aruljothi)
Inspr. of Police,
V&AC, Trichy.